**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

25.07.2025

C.O.S. No. 4/2024

D.W.1 திரு. ஜெகன்ராஜ்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) -**

இந்த வழக்கில் எத்தனை பிரதிவாதி என்றால் ரதி ஏஜென்சிஸ், இந்தியா சிமெண்ட் மீது வழக்கு பதிவு செய்துள்ளார்கள். ரதி ஏஜென்சிஸ் தாக்கல் செய்துள்ளதாரா, அல்லது உரிமையாளர் தாக்கல் செய்துள்ளாரா என்றால் உரிமையாளர் தாக்கல் செய்துள்ளார். ரதி ஏஜென்சிஸ் உரிமையாளர் ரவிபாய் இந்த வழக்கில் அவர் சார்பாக சாட்சியம் அளிப்பதற்கு அதிகாரப்பத்திரம் எதுவும் எழுதி தந்துள்ளாரா என்றால் இல்லை. என்னை அவர் சார்பாக விசாரிக்க அனுமதி கோரி இந்த நீதிமன்றத்தில் அவர் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நீதிமன்றத்தில் அனுமதி பெறாததால் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. என்னை சாட்சியம் அளிக்க அனுமதி கோரி நான் தாக்கல் செய்த I.A. 1/2025 மனுவிலாவது அவர் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனக்கும், ரதி ஏஜென்சிஸீக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல, 18 வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன். ரதி

ஏஜென்சிஸ் நிறுவனத்தில் நான் வேலை செய்தேன் என காட்டுவதற்கு EPF or GPF எண்ணோ, வேறு எந்த ஆதாரமோ உள்ளது என்றால் உள்ளது. அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்வில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ரதி ஏஜென்சிஸ் சார்பாக மறுப்புரை எதுவும் தாக்கல் செய்துள்ளார்களா என்ற விவரம் எனக்கு தொியுமா என்றால் தொியாது. அப்படியே அவர்கள் சார்பில் மறுப்புரை தாக்கல் செய்திருந்தாலும் அதில் என்ன விவரம் உள்ளது என்ற விவரம் எனக்கு தொியாது என்றால் சரிதான். அதே மாதிரி இந்த வழக்கில் ரதி ஏஜென்சிஸ் பணம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார்களா என்ற விவரம் எனக்கு தொியுமா என்றால் தொியும், தாக்கல் செய்துள்ளார்கள். அந்த மனுவில் என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தொியாது என்றால் தொியும். அந்த மனுவில் யார் கையொப்பம் செய்தார்கள் என்ற விவரம் தொியுமா என்றால் தொியும், ரவிபாய் தான் கையொப்பம் செய்துள்ளார்கள். ரதி ஏஜென்சிஸ் சார்பாக சாட்சியம் சொல்வதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது என்றாலும் வாதி பிரதிவாதிகளுக்கிடையே பிரச்சினை குறித்து எந்த விவரமும் எனக்கு தொியாது என்றாலும் சரியல்ல, தொியும். நான் வேலை பார்த்த கால கட்டத்தில் ரதி ஏஜென்சிஸிக்கு இந்தியா சிமெண்ட்ஸ் விற்பனை பிரதிநிதி எல்லா நாளும், எல்லா வாரமும் வருவரா என்ற விவரம் எனக்கு தொியுமா என்றால் தொியும், வருவார். யார் யார் அவ்வாறு வருவார்கள் என்றால் விற்பனை மேலாளர் ரமேஷ், கணேஷ் ஆகியோர் வருவார்கள். அவர்கள் ஒவ்வொரு மாதமும், விற்பனை செய்த பொருட்கள் குறித்து மற்றும் பணம் செலுத்தியது, தள்ளுபடி ஆகியவை பற்றி ஒரு Statement

கொடுத்து ரவிபாயிடம் கையொப்பம் பெறுவார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் ரவிபாய் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் இல்லை, அது வெறு யாரோ கையொப்பம். ரதி ஏஜென்சிஸ் நிறுவனத்திற்கு வருமான வரி கணக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தாக்கல் செய்யப்பட்டது. அந்த நிறுவனத்தின் நிரந்தர கணக்கு எண் எனக்கு தொ ியும். அவ்வாறு கணக்கு தாக்கல் செய்வதற்கான விவரங்களை ஆடிட்டருக்கு நான் கொடுப்பேனா அல்லது ரவிபாய் கொடுப்பாரா என்றால் நான் எடுத்துக் கொடுப்பேன். இந்தியா சிமெண்ட்லிருந்து இந்த வழக்கில் நாங்கள் கூறியுள்ளவாறு எங்களுக்கு தர வேண்டும் என குறிப்பிட்டுள்ள தொகையை வருமான வரிக் கணக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது. அது சம்பந்தமான 2016-2017, 2017-2018 வருடத்திற்கான வருமான வரி கணக்கை தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். தற்போது என் கையில் உள்ளதா என்றால் இல்லை, எவ்வளவு நாட்களில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய முடியும் என்றால் 1 வாரத்தில் தாக்கல் செய்ய முடியும். அந்த கணக்கில் இந்தியா சிமெண்டிலிருந்து ரவிபாய் ரதி ஏஜென்சிஸிலிருந்து வர வேண்டிய தொகை தொ ியுமா என்றால் தொ ியும். வருமான வரி கணக்கை என்னால் அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.